மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 138, திரு சி. சுவாமிநாதன் இருக்கையில் இல்லை.

வினா எண் 139, திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. தேனி பன்னீர்செல்வம் கேட்கிறார். மாண்புமிகு பிறபட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

139–

வெள்ளையம்மாள்புரத்தில் கள்ளர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்தல்

*17151–திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) உத்தமபாளையம் தாலுகா, வெள்ளையம்மாள்புரத்தில் இயங்கிவரும் கள்ளர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஒதுக்கியுள்ள தொகை, செலவு செய்துள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) கட்டிடம் கட்டும் பணி தற்போது தடைப்பட்டுள்ளதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உத்தமபாளையம் தாலுகா, வெள்ளையம்மாள் புரத்தில் இயங்கிவரும் கள்ளர் உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் கட்டிமுடிக்கப்பட்டு 1989 செப்டம்பர் மாதம் திறக்கப்பட்டுவிட்டன. இதற்கான அனுமதிக்கப்பட்ட தொகையான ரூ. 2.00 இலட்சத்தில் செலவினம் ரூ. 1,57,693/–ஆகும்.

மேலும் மேற்படி பள்ளிக்கு நடப்பு நிதியாண்டில் கூடுதலாக கழிப்பறை வளாகத்துடன் 4 கூடுதல் வகுப்பறைகள் கட்ட ரூ.3.87 இலட்சம் அனுமதித்து கடந்த ஜூன் மாதம் ஆணைகள் இடப்பட்டுள்ளன. இதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. தேனி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதற்காக எங்களுடைய இதய தெய்வத்திற்கு நாங்கள் நன்றியைத் தெரிவிக்கக்

கடமைப்பட்டிருக்கின்றோம். அதேபோன்று, கள்ளர் சீரமைப்புக் கழகம் துவங்கி பல ஆண்டுகாலம் ஆகிவிட்டது. அப்போது கட்டிய பள்ளிக் கட்டிடங்கள் அனைத்தும் மிகவும் பழமையான கட்டிடங்களாக இருப்பதால், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் அனைத்துக்கும், குறிப்பாக உத்தமபாளையம் தாலுக்காவில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் இதே போன்று கூடுதல் கட்டிட வசதிகள் செய்து தருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 140, டாக்டர் பெ. வீரபாண்டியன்; மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்.

140–

செங்கம் தோக்கவாடியில் கதர் கிராமிய வாரியத்தின் மூலம் சோப்பு தயாரிக்கும் திட்டம்

*14971–**டாக்டர் பெ. வீரபாண்டியன்:**

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் தோக்கவாடியில் உள்ள கதர் கிராமிய வாரியத்தின் வேப்ப எண்ணெய் உற்பத்தி மையத்தில் குளியல் சோப்பு தயாரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் நகரில் தோக்கவாடி கிராமத்தில் கதர் கிராமிய வாரியத்தால் வேப்ப எண்ணெய் உற்பத்தி அதிக அளவில் நடைபெறுகிறது. இந்த இடத்திலிருந்துதான் தமிழகத்தில் உள்ள மற்ற மாவட்டங்களுக்கு வேப்ப எண்ணெய் அனுப்பப்பட்டு சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, தோக்கவாடி கிராமத்தில் அங்கேயே சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.